# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19-A, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல் சாலை)

எழும்பூர், சென்னை – 600 008,

தொலைபேசி : ++91-44-28411376 / 28411378 / 28411379

நிகரி: ++91-44-28411377

மின்னஞ்சல்: tnerc@nic.in இணையதளம்: www.tnerc.gov.in


எண்.5/2012
18–07–2012

## செய்தி வெளியீடு

### குறைதீர்ப்பதற்கான செயலமைவுத் திட்டம் பற்றி மின்நுகர்வோருக்குரிய விழிப்புணர்வு

மின்நுகர்வோர் அனைவருக்கும் போதிய அளவு தரமான மின்சாரம் வழங்கப்படுகிறது என்பதை உறுதி செய்வதற்கு 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தில் பல்வேறு வகைமுறைகள் உள்ளன. மின்நுகர்வோர், தம்முடைய குறைகளைத் தீர்ப்பதற்கு அச்சட்டத்தில் பல்வேறு கூறுகள் உள்ளன. இந்தச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின்படி, மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் போன்ற அமைப்புகள், குறைகளை உரிய காலத்தில் திறம்படத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இதே போன்று, மின்சாரச் சட்டம் மற்றும் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறைவிதி ஆகியவற்றின்படி மின்பகிர்மான உரிமம்தாரர் மின்விநியோகப் பணிகளை மின்நுகர்வோருக்கு திறம்படவும், அவர்கள் திருப்தியடையும் வகையிலும் செய்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. சட்டத்தின் இந்த வகைமுறைகளின் அடிப்படையில் ஒவ்வொரு மின்பகிர்மான வட்டத்திலுமுள்ள மின்நுகர்வோர் குறைதீர் மன்றமானது, மின்பகிர்மான வட்டத்தின் மேற்பார்வை பொறியாளர் தலைமையிலும் மாவட்ட ஆட்சியரால் பொது மக்களிலிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்களுடனும் நிறுவப்பட்டுள்ளது. மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திடம் தாக்கல் செய்யப்படும் குறை தொடர்பான முறையீடு எதற்கும் ஒப்புகையளிக்கப்படும். வழக்கமாக 10 நாட்களுக்குள் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்து முறையீட்டாளருக்கு தகவல் அளிக்கப்படும் மற்றும் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மனுவைப் பெற்றதிலிருந்து 60 நாட்களுக்குள் உரிய ஆணை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் முறையீட்டாளர் திருப்தியடையாதிருப்பாரானால் அல்லது 60 நாட்களுக்குள் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திலிருந்து பதிலுரை எதுவும் பெறப்படவில்லை என்றால், உடனடியாக அவர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய அலுவலகத்தில் அமைந்துள்ள மின்குறைத் தீர்ப்பாளரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்யலாம்.

இந்தச் சட்டத்திலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குமுறைவிதிகளிலும், இந்த வகைமுறைகள் இருந்தபோதிலும், பெரும்பாலான மின்நுகர்வோர், இந்த வகைமுறைகள் பற்றி அறிந்திருக்கவில்லை என்று தெரிய வருகிறது. கடந்த ஆண்டின்போது மாநிலம் முழுவதும் மின்நுகர்வோர் குறைதீர் மன்றங்களின் முன்பு, கிட்டத்தட்ட 600 மனுக்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்தில் இரண்டு கோடிக்கும் மேல் மின்நுகர்வோர் இருந்தபோதிலும், இந்த எண்ணிக்கையிலான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளபடியால், மின்நுகர்வோர் இந்த செயல்முறை பற்றி அறிந்திருக்கவில்லை எனத் தெரியவருகிறது. இதுபோன்று, மின்குறை தீர்ப்பாளரால் பெறப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை, ஆண்டொன்றுக்கு கிட்டத்தட்ட 60 மட்டுமேயாகும்.

மின்நுகர்வோர் திருப்தியடையும் வகையில் மின்விநியோகப் பணிகளைச் செய்வதற்கு மின்பகிர்மான உரிமம்தாரருக்கு உந்துதல் ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் நிறைவேற்றப்படக்கூடிய செயல்திறச் செந்தரங்களை நிர்ணயித்துள்ளது, இதன்படி புதிய மின்னிணைப்பு வழங்குதலும், பழுதடைந்த மின்னளவிகளை மாற்றி வைத்தலும் 30 நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும். இந்த ஒழுங்குமுறைவிதிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளன. மின்நுகர்வோர் தம்முடைய குறைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு இந்த மன்றங்களை அணுகுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. மின்நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் பற்றிய விவரங்களை, வெள்ளை மின்னளவி அட்டைகள் மூலமாகவும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் ஆகியவற்றின் இணைய தளங்களின் மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம். மின்நுகர்வோர் தம்முடைய குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த செயலமைவுத் திட்டத்தைப் பயன்படுத்தலாம். மின்பகிர்மான உரிமம்தாரால் செயல்திறத் செந்தரம் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும்பொருட்டு ஒழுங்குமுறை ஆணையத்தினால் அறிவிக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில், செயல்திறச் செந்தரத்திற்கு இணங்கி நடக்காமைக்காக அபாரதம் விதிப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆணையத்தின் ஆணைப்படி)

(சி.குணசேகரன்)
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்